Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 03, 2024

வெள்ளிக்கிழமை மே 03, 2024 | ஒளி: 09 கதிர்: 244 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




## உ/த பெறுபேறு வருகிறது

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மே இறுதி வாரத்தில் வெளியிட முடியும் என பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

புங்குடுதீவு மனித புதைகுழியில்

## “வாய்க்கரிசி போட்ட அடையாளம் உள்ளது”

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - புங்குடுதீவு மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடு பெண் ஒருவருடையது எனவும், வாய்க்கரிசி போட்டமைக்கான அடையாளங்கள் உள்ள அந்த எலும்புக்கூடுடன் நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலமானது இந்து முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டதாக இருக்கலாம் என தமது ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை, சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆலய சூழலில் கிடங்கொன்றினை வெட்டியபோது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளிவந்தன.

அதனைத் தொடர்ந்தே கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதை,

தொடர்ச்சி P2



## சம்பள உயர்வு விவகாரத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்க அவகாசம்

### முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு



தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை நிர்ணயிக்க விரும்பியிருக்கும் தொழில் ஆணையாளர் நாயகத்தின் இந்த முடிவு தொடர்பான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய 2024 மே 15 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது என முதலாளிமார் சம்மேளனம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பெருச்சாளிகள் புகுந்து

# “வீட்டை உடைத்தன”

### பிள்ளையான் தெரிவிப்பு; கிழக்கை மீட்டெடுக்க தலைவர் வேண்டுமாம்



தமிழரசு கட்சிக்குள் பெருச்சாளிகள் புகுந்து வீட்டை் சின்னா பின்னமாகி விட்டதன. இனி அதை கட்டியெழுப்பு முடியாது என்கின்ற நிலை மக்களுக்கும் வந்துவிட்டது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

எனவே, வடபகுதியில் இருந்து, தலைவர்கள் வந்து எங்களை ஏமாற்றக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசு கட்சி ஆதரவாளர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். எமது கட்சியுடன் கரம் கோர்த்து கிழக்கை மீட்கச் செயற்படுமாறும் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க

# “பதவி வேண்டும்”

### கேட்கிறார் சாணக்கியன்; மண்ணையும் இழந்து விடுவோம் என்கிறார்



வ.சக்தி

மட்டக்களப்பில் உள்ள ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் பல்வேறு கட்சிகளுக்கு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்ததன் காரணமாக இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் வந்துள்ளார்கள். ஆனால், எமது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாக இருந்தால் அனைத்து அமைச்சுப் பதவிகளும் வட கிழக்கிற்குக் கிடைக்க வேண்டும் என இலங்கைத் தமிழசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## 8 பெண்கள் உட்பட 641 பேர் கைது

மே 1ஆம் திகதியன்று நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத் தன்மை மிக்க போதைப்பொருட்களுடன் 8 பெண்கள் உட்பட 641 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 16 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 3 பேரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## புதிய ஆளுநர்கள் பதவிப் பிரமாணம்





தென் மற்றும் வடமேல் ஆகிய இரண்டு மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, வியாழக்கிழமை (02) வழங்கிவைக்கப்பட்டது.
தென் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் வட மேல் மாகாண ஆளுநராக நசீர் அஹமட் ஆகியோரே பதவியேற்றுக் கொண்டுள்ளனர்.



## “நஞ்சை கொடுத்து கொல்ல சதி”

### தனக்கு நஞ்சு வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டதாகவும் இதற்காக சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்

தன்னை கொலை செய்வதற்கு நஞ்சூட்டப்பட்டது எனத் தெரிவித்துள்ள விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர் ரொசான் ரணசிங்க, சுமார் ஒன்றரை மாதத்திற்கு முன்னதாக இவ்வாறு நஞ்சு வழங்கப்பட்டது என்றார்.

அம்பாறையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பங்கேற்ற போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தான் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, நஞ்சு வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டதாகவும் இதற்காக சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## கபிலவுக்கு சொந்தமான போதைப்பொருள் சிக்கியது



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான டுபாய் கபிலவுக்கு சொந்தமானதாக சந்தேகிக்கப்படும் போதைப்பொருள் தொகையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மன்னாரில் ஒருவரின் சொத்து முடக்கப்பட்டது

எஸ்.றொசேரியன் லெம்பேட்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய தேடுதல் நடவடிக்கையின் மன்னாரில் சந்தேக நபர் ஒருவரின் 9 கோடியே 30 லட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் வியாழக்கிழமை(02) முடக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## பதுளையில் மண்சரிவு அபாயம் அதிகரிப்பு

பதுளை-எல்ல கரந்தகொல்ல பகுதியில் எந்தவொரு நேரத்திலும் பாரிய மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

“காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

## படகுச் சேவை ஆரம்பிக்கப்படும்”

### உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, மட்டக்களப்பில் தெரிவித்தர்

வ.சக்தி

காங்கேசன்துறைக்கு நாகப்பட்டினத்திற்கும் இடையிலான படகுச்சேவை இம்மாதம் (மே) ஆரம்பிக்கப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மட்டக்களப்புக்கு வியாழக்கிழமை(02) வருகை தந்திருந்த இவர், மட்டக்களப்பு காந்திப் பூக்காவில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “வாய்க்கரிசி போட்ட அடையாளம் உள்ளது”

அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அவ்விடத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்த நிலையில் அவ்விடத்தில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க , ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில், நீதவான், சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டவர்கள் முன்னிலையில் அகழ்வு பணிகள் வியாழக்கிழமை (02) முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, புதைகுழியில் இருந்து எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் சடலத்துடன் அரிசித் துகள்கள் , துணி . செப்பு நாணயங்கள் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டுள்ளன.

அரிசி துகள்கள், துணி மற்றும் செப்பு நாணயங்கள் என்பன சடலத்துடன் மீட்கப்பட்டமையால் , உயிரிழந்தவரின் உடலத்திற்கு வாய்க்கரிசி போடப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதேவேளை, எலும்புக்கூடு புதையுண்டு இருந்த நிலையைப் பார்க்கும்போது, உரிய முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றமையால் இது நல்லடக்கம் செய்யப்பட்ட சடலமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடு தொகுதி , அவற்றுடன் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்ட நீதவான் அது தொடர்பில் பகுப்பாய்வு பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

அத்துடன், அகழ்வு பணிகள் நிறைவுக்கு வந்துள்ளது.

சடலம் மீட்கப்பட்ட பகுதியை அண்மித்த பகுதிகளில் கிடங்குகள் வெட்டி, கட்டட வேலைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் , மீட்கப்பட்ட சடலத்தின் பகுப்பாய்வு அறிக்கைகள் நீதிமன்றுக்குக் கிடைத்த பின்னர் , நீதிமன்ற அனுமதியுடன் அப்பகுதிகளில் வேலைகளை முன்னெடுக்குமாறும் ஏனைய பகுதிகளில் வேலைகளை முன்னெடுக்கத் தடையேதும் இல்லை என ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.




# உ/த பெறுபேறு வருகிறது

இந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு மொத்தம் 346,976 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். அவர்களில் 281,445 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர், 65,531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர்.

இந்நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை (06) ஆரம்பமாகவுள்ளது. இந்த பரீட்சை மே மாதம் 15ஆம் திகதி வரையிலும் நடைபெறும்.

இந்த நிலையில் 3527 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# “வீட்டை உடைத்தன”

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தின கூட்டம் மட்டக்களப்பு கொம்மாந்துறை மைதானத்தில் புதன்கிழமை (1) இடம்பெற்றது.

அதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவோம் அதற்காக வாக்களியுங்கள் என கேட்டவர்கள் தங்களுக்குத் தலைமை கிடைக்கவில்லை என்று அந்த கட்சியை அழித்துவிட வேண்டும் என்று நீதிமன்றம் சென்றிருக்கின்றனர். இவர்கள் எல்லாம் இந்த மண்ணில் விடுதலையைப் பெற்றுத் தருவார்களா? என கேட்க வேண்டி இருக்கிறது.

இந்த தொழிலாளர் தினத்திலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தொண்டர்களைத் தேடவில்லை தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனைத் தேடுகின்றது. உங்கள் குழந்தைகளிடமிருந்து நாளை கிழக்கு மாகாணத்தை மீட்டெடுக்கத் தலைவர்களை உருவாக்கவேண்டும் என்றார்..

இங்கிருக்கின்ற விவாசாயின் குழந்தை, மீனவரின் குழந்தை, தொழிலாளியின் குழந்தை, இந்த கிழக்கு மாகாணத்தை ஆளுகின்ற பணியைப் பொறுப்பேற்க வேண்டும் அதற்காக எமது கட்சி பணியாற்றிக் கொண்டிருக்கின்றதுடன் மே தின கூட்டத்தைப் பிரமாண்டமாக நடாத்துகின்றது.

எதிர்காலம் என்பது மிகத் திட்டமிடப்பட்டு வகுக்கப்படவேண்டும் என்பதற்காக பல செயற்பாடுகளை செயற்பாட்டு ரீதியாக எமது கட்சி அடையாளப்படுத்திச் செயற்பட்டு வருகின்றது என்றார்.

கொழும்பிலிருந்து கொண்டு அவர்களின் வாசல்களுக்கு அழகான புற்தரைகளை வைத்துவிட்டு அங்கு தமது பிள்ளைகளை சர்வதேச பாடசாலைகளில் கற்பித்துவிட்டு இங்கு வந்து அவர்கள் தலை கீழாகப் புரட்டிப் பேசுவார்கள் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியின், நலன் விரும்பிகளே! ஆதரவாளர்களே, நண்பர்களே அவர்களுக்குத் துணைபுரிந்து கொண்டிருக்கின்ற பணபலம் படைத்தவர்களே பெருச்சாளிகள் புகுந்து உங்களது வீடு சின்னா பின்னமாகிவிட்டது. இனி அதைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே, இன்னமும் நாங்கள் அப்படியே இருந்து பதவி மோகத்துக்காகவும் அடைய முடியாத இலக்குக்கும் போகின்றோமா என ஆழமாகச் சிந்தியுங்கள் எனக் கேட்டார். .

கிழக்கு மாகாணத்தில் நீண்ட வரலாற்றில் தனித்துவத்தையும் கிழக்கு மாகாண மக்களின் அடையாளமாக மாறிவருகின்றது எங்களுடைய விருச்சம் முழு பிராந்தியத்தையும் ஆண்டு கொண்டு இருக்கின்றது என்பதுடன் அது அகல கால் வைப்பதற்குக் கட்சி முனைகின்றது என்பதை நீங்கள் சிந்தித்து எமது கட்சியுடன் கரம் கோர்த்துச் செயற்படுங்கள் என அழைப்பு விடுத்தார்.

# “பதவி வேண்டும்”

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழிலாளர் தின நிகழ்வு மட்டக்களப்பு-பெரியகல்லாறு பிள்ளையார் ஆலய முன்றலில் புதன்கிழமை (01) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“தமிழ் மக்களுக்குத் தலைமைத்துவம் வழங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மிக முக்கியமான தீர்மானங்களை எதிர்காலத்தில் எடுக்க வேண்டும். எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்த்தல் நடைபெறவுள்ளது. சிலவேளை, பாராளுமன்றத் தேர்தலில் நடைபெறவுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் எமது கட்சி சில இறுக்கமான தீர்மானங்களை எடுத்தால்தான் நாம் எமது மக்களையும் மண்ணையும் பாதுகாக்க முடியும்” என்றார்.

இலங்கையிலே இருக்கின்ற 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு 30இற்கு மட்டுப்படுத்தப்பட்டது. அந்த அமைச்சரவையிலே விகிதாசார அடிப்படையிலே பல அமைச்சுப் பதவிகள் தமிழர்களுக்குக் கிடைக்கலாம். எனினும், மத்திய அரசாங்கத்திலே அமைச்சுப் பதவிகளைப் பெறுவதனால் மாத்திரம் எமது மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய சூழல் இல்லை. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வினூடாகவும், அரசியல் அதிகாரம் என்பன எமது கையில் இருந்தால்தான் நாம் எமது மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றார்

மாகாணசபை, வடக்கு கிழக்கு இணைந்த ஒரு கட்டமைப்பு போன்ற நிருவாக கட்டமைப்பு தேவை. அதனூடாக தமிழ் மக்களிடத்திலிருந்து கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்றவற்றுக்குரிய பல அமைச்சர்கள் உருவாகினால் தான் வட கிழக்கிலுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்றார்.

எனவே, வருகின்ற தேர்தலில் மக்களைச் சரியான பாதையில் எமது கட்சி கொண்டு செல்லாவிட்டால் நாம் மக்களையும் இழந்து மண்ணையும் இழந்து விடுவோம். தமிழரசு கட்சிக்கு மகா நாட்டுக்குத்தான் நீதி மன்றம் தடை விதித்துள்ளது. மாறாகக் கட்சிக்கு வேறு எந்த தடையும் விதிக்கவில்லை. நாளை ஒரு தேர்தல் வந்தால் எமது கட்சி அதில் போட்டியிடும் என்றார்.



# சம்பள உயர்வு விவகாரத்துக்கு ஆட்சேபனை...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 2382/04, தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தி வர்த்தகம், இறப்பர் மற்றும் கச்சா இறப்பர் உற்பத்தி வர்த்தகம் ஆகிய துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டது.

அதற்காக ஊடகங்கள் மூலம் பரவலான செய்திகள் வெளியாகியிருந்தன. மேலும், மே 1ஆம் திகதி உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொட்டகலையில் நடைபெற்ற கூட்டத்திலும், பெருந்தோட்டக் கம்பனிகளின் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கூட்டத்தில் ஜனாதிபதி இதனையே மீண்டும் வலியுறுத்தினார்.

நாளாந்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், ஜனாதிபதியின் கூற்று தோட்டத் தொழிலாளர்களாலும் பொதுமக்களாலும் தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் அதன் உறுப்பினர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏப்ரல் 30, 2024 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, தொழிலாளர் ஆணையாளர் நாயகம் தேயிலை செய்கை மற்றும் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை நிர்ணயிக்கவிரும்புகிறார். இந்த முடிவு தொடர்பான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மே 15, 2024 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கவும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கவும் இந்த அறிவிப்புகள் மூலம் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் உட்பட அனைத்துப் பங்கு தாரர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அதிகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் 2024மே 01 ஆம்திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் உத்தேச புதிய சம்பள அதிகரிப்புக்கான திகதி அல்லது அதிகரிக்கப்பட்ட சம்பளத்தொகை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் இந்த முன்மொழிகளுக்கு ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யும் என்பதை இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் உறுதிப்படுத்தமுடியும்.

இந்த அறிவிப்பு தொடர்பாக, அரசு அதிகாரிகளின் அறிக்கைகளும், ஊடகங்கள் வெளியிட்ட விதமும், சம்பள அதிகரிப்பு குறித்து, தொழிலாளர்கள் மத்தியில் தேவையற்ற அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என சம்மேளனம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# 8 பெண்கள் உட்பட 641 பேர் கைது

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 158 கிராம் ஹெரோய்ன், 101 கிராம் ஐஸ், 3,169 கிராம் கஞ்சா, 33 கிராம் ஹெரோய்ன், 10 கிராம் ஐஸ் மற்றும் 184 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## கபிலவுக்கு சொந்தமான போதைப்பொருள் சிக்கியது

இதன்போது 13 கிலோ கிராம் ஹெரோயின், 6 கிலோ கிகராம் ஹெஷ், 500 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருட்களும், 1.5 மில்லியன் ரூபாய் ரொக்கப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் ஒருவரின் சொத்து முடக்கப்பட்டது

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தேக நபர் ஒருவருக்குச் சொந்தமான இரண்டு வீடுகள்,சொகுசு வாகனம் உள்ளடங்களாக 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் 2002இல் அரச வீட்டுத்திட்டம் ஒன்றைப் பெற்று இரண்டு படகுகளை வைத்து சாதாரண குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் 2019 பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குள் பல கோடி சொத்துக்களை சேர்த்துள்ளார்.

அதன் அடிப்படையில் குற்றப் புலனாய்வு பிரிவின் கீழ் இயங்கும் சொத்து முடக்கள் பிரிவினர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்டனர்.

அந்த விசாரணையின் அடிப்படையில் நீதிமன்ற அனுமதியைப் பெற்று வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜசேகர மேற்பார்வையின் கீழ், மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் தலைமையில் கொழும்பு குற்ற புலனாய்வு பிரிவின் சட்ட விரோத விசாரணை பிரிவு பொலிஸார் மேற்படி நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபரின் சின்னக் கடையில் காணப்படும் கடை தொகுதியுடன் கூடிய வீடு ஒன்றும் தலைமன்னார் பகுதியில் உள்ள விசாலமான வீடு சொகுசு வாகனம் ஒன்று முடக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்

இதனைத் தொடர்ந்து உயர் நீதி மன்றத்தின் அனுமதியுடன் சொத்துக்களை அரசுடமையாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# பதுளையில் மண்சரிவு அபாயம் அதிகரிப்பு

இதேவேளை, எல்ல - கரந்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் உமாஓயா பல்நோக்கு திட்டத்தின் விளைவா? இல்லையா என்பதைக் கண்டறிவதற்காகத் தொழில்நுட்ப உபகரணங்களை நிறுவத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிரேஷ்ட புவியியலாளர்கள் குழுவொன்று, எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்தகொல்ல பகுதிகளை ஆய்வு செய்தது.

அதன்படி கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிறப்புக் குழுவினால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கருத்துரைத்த அதன் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன, ‘குறித்த மண்சரிவு அபாயம் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக” தெரிவித்தார்.

இந்த பகுதிகளில் பொருத்தப்படும் தொழில்நுட்ப கருவிகளின் அடிப்படையில் விஞ்ஞானப்பூர்வமாக இதை உறுதிப்படுத்த முடியும் என குறிப்பிட்டார்.

# படகுச் சேவை ஆரம்பிக்கப்படும்

நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கு ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டிருக்கும் படகுச் சேவையை ஆரம்பித்தல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மே மாதத்தின் நடுப்பகுதியில் மீண்டும் படகுச்சேவை ஆரம்பிக்கப்படும் என்றார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைத்தல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த உயர்ஸ்தானிகர்,

அது தொடர்பில் நிலத்தொடர்பை ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்து வருகிறோம்.



முதலாவது கட்ட பேச்சுக்கள் நிறைவடைந்துள்ளன. இரண்டாவது கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கிறது. இது நீண்டகாலத் திட்டம் என்ற வகையில் இது ஒரு சில வருடத்தில் நிறைவடையக்கூடியதல்ல எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# விண்ணப்பம் கோரல்

ஏ.எம்.ஜலீல்

கலாசார திணைக்களம் தேசிய ரீதியில் 'சாகித்திய கலை விழா 2024' ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

அந்தவகையில், உக்குவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படவுள்ள இந்த சாகித்திய கலை விழாவில் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

பாலர் பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவு, மற்றும் திறந்த பிரிவுகளுக்கான போட்டிகளும் உள்ளன இப்போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்கான பரிசுகளுடன் சான்றிதழ்களும் விழாவின் இறுதியில் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்புவோர் போட்டிகளுக்கும் விண்ணப்பங்களுக்கும் உக்குவளை பிரதேச செயலக கலைப்பிரிவு காரியாலயத்துடன் தொடர்புகொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 074-0712639 என்ற இலக்கத்துடன் ஏ.எம்.ஜலீல் என்பவருடன் தொடர்பை ஏற்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.



# சொல்ஹெமுடன் விசேடசந்திப்பு

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெமை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், சந்தித்துக்கு கலந்துரையாடியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுச்சூழல் தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், கிழக்கு மாகாணத்தில் சுற்றுச்சூழலை உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற வைப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலை முறையாகப் பராமரிக்கும் சந்தர்ப்பத்தில்தான் எதிர்காலத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். இதனால் கிழக்கில் சுற்றுச் சூழலைப் பராமரிப்பு தொடர்பான சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

அதன் ஒரு முக்கிய கட்டமாக சுற்றுச் சூழல் தொடர்பான ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெம் மற்றும் நேர்வேயின் பாராளுமன்ற உறுப்பினர் ஹிமான்ஷு கிளாடி ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழலை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

# 60 நாள் ஆசையில் மிதந்த இளைஞன் கைதானார்

மொஹமட் ஆஸிக்



பதின்ம வயது சிறுமி ஒருவருடன் இரண்டு மாதங்கள் தங்கியிருந்த 18 வயதுடைய இளைஞனும் அவருக்கு உதவிய மேலும் மூவரையும் அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அலவத்துகொடை பொலிஸ் பிரிவில் வசிக்கும் பெண்ணொருவர் தனது 14 வயதான பேத்தி? கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இரவு முதல் காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார் குறித்த சிறுமி தனது காதலனுடன் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சிறுமி பொலிஸ் நிலையத்திற்கு தனது பாட்டியுடன் , புதன்கிழமை (01) வந்து, 18 வயதுடைய காதலனுடன் சென்று, மாத்தளை பிரதேசத்தில் இரு மாதங்களாக வீட்டில் தங்கி இருந்ததாகக் கூறியுள்ளார்.

இதற்கமைய, 14 சிறுமியுடன் தங்கியிருந்த குற்றத்திற்காக 18 வயதுடைய காதலனான இளைஞனையும் அவருக்கு உதவிய மாத்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள இரு வீடுகளுடைய உரிமையாளர்களும் மற்றுமொருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தொழிலாளர்கள் கொண்டாட்டம்



ஆ.ரமேஸ்

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ1,700 சம்பள உயர்வு கிடைக்குமென அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், பெருந்தோட்டங்கள் பலவற்றில், விசேட பூசைகள் செய்தும், பாற்சோர் சமைத்து, பட்டாசு கொளுத்தியும் வியாழக்கிழமை(02) கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்வுகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநில பிரதிநிதிகளும் பங்கேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பராட்டே சட்டத்தை இடைநிறுத்த அனுமதி

கடன் பெறுநர்களால் மீள செலுத்தாமல் தவறவிடப்பட்ட கடன்களை அறவிடும் வகையில், அந்தக் கடனுக்கு பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு வங்கிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை (பராட்டே சட்டம்) டிசெம்பர் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலத்துக்கு நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் அண்மையில் (30) பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட அதிகாரிகள் குறிப்பிடுகையில், கடன் பெறுநர்களுக்குத் தற்காலிகமான நிவாரணமொன்றை வழங்க இதன்மூலம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர். அதற்கமைய, டிசெம்பர் 15இன் பின்னர் இது தொடர்பில் எந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குழு வினவியது. கலந்துகொண்ட அதிகாரிகள் இது தொடர்பில் தெளிவான பதிலை வழங்கத் தவறியதால் டிசெம்பர் 15இன் பின்னரான காலப்பகுதியில் பராட்டே சட்டத்தின் கீழ் வருபவர்கள் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் வழிகாட்டலை வழங்குமாறு குழு பரிந்துரை வழங்கியது.

அத்துடன், பராட்டே சட்டத்தின் கீழ் வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்துகொண்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் வங்கிகளுடன் கலந்துரையாடுவதற்கு நியாயமான சந்தர்ப்பம் வழங்குமாறும் குழு இதன்போது பரிந்துரை வழங்கியது.


மேலும், பராட்டே சட்டத்தின் கீழ் கடன் பெறுவது வகைப்படுத்தப்படும் முறை தொடர்பில் அதிகாரிகளிடம் குழு வினவியது. விசேடமாக நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்கள் இந்த சட்டத்தின் கீழ் கடன்களைப் பெற்றுள்ள முறை மற்றும் இவ்வாறு வகைப்படுத்தல் எந்த அளவுகோல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தொடர்பிலும் குழுவின் தலைவர் வினவினார். இது தொடர்பான சரியான தரவுகள் அதிகாரிகளிடம் இருக்கவில்லை என்பதால் அந்தத் தரவுகளைக் குழுவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவர் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினார்.



அத்துடன், இங்கு துறை ரீதியாகக் கவனம் செலுத்தும் போது அதிகமாகப் பாதிக்கப்பட்ட துறை எது என்பது தொடர்பில் விகிதாசார ரீதியாகக் குழுவினால் வினவப்பட்டது. அத்துடன், 2020, 2021 மற்றும் 2022 ஆகிய கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாகப் பொருளாதார வீழ்ச்சி நிலவிய விசேடமான கலப்பகுதிக்கு ஒப்பீட்டு ரீதியாக ஏனைய காலப்பகுதியில் பராட்டே சட்டம் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தரவுகளை வழங்குமாறும் அதிகாரிகளிடம் குழு வினவியது. இது தொடர்பான தரவுகளை எதிர்காலத்தில் குழுவுக்கு வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்கு மேலதிகமாக, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளுக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன், 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளுக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

# இந்தியத் தனியார் நிறுவனத்தால் விமான நிலையத்தில் பதற்றம்



கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட விசா வழங்கும் நடைமுறை மே 1ஆம் திகதி முதல் இந்தியத் தனியார் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டதால், அன்றையதினம் (மே.1) மாலை 5 மணி முதல் அவர்களால் கணினிகளைச் சரியாக இயக்க முடியவில்லை, இதனால் விமான பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

நீண்டநேரம் காத்திருந்தமையை அடுத்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுவரை, குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர் ஒரு நிமிடம் என்ற குறுகிய காலத்திற்குள் விசாவை வழங்கியிருந்தனர்.

அதற்காக இந்தியா, சீனா போன்ற சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் நாடுகளில் இருந்து கட்டணம் வசூலிக்காமல், சார்க் நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடம் 30 நாட்களுக்கு 20 அமெரிக்க டொலர்களும், ஏனைய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து 50 அமெரிக்க டொலர்களும் வசூலிக்கின்றனர்.

12 வயதிற்குட்பட்ட பயணிகள் மற்றும் புலம்பெயர்ந்த பயணிகளுக்கு இலவச விசாக்கள் வழங்கப்பட்டன. ஆனால், மே 1ஆம் திகதி மாலை 05.00 மணிக்கு, இந்த விசா வழங்கும் பணியை மேற்கொண்ட இந்தியத் தனியார் நிறுவனம் சார்க் நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடம் விசா கட்டணத்துடன் கூடுதலாக 22 அமெரிக்க டொலர்களையும், பிற நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து 25 அமெரிக்க டொலர்களையும் வசூலிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த விசா கட்டணங்களில் சேவைக் கட்டணங்கள் மற்றும் வசதிக் கட்டணங்களும் வசூலிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, முழு விசாவுக்கான மொத்தக் கட்டணம் 100.77 அமெரிக்க டொலர்களாக மாறியுள்ளது, அதில் 25 அமெரிக்க டொலர்கள் இந்த இந்திய தனியார் நிறுவனத்திற்கு அனுப்பப்படும் என்று குடிவரவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் பின்னணியில், ஒரு வருடத்திற்குள் 03 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தால், இந்த இந்திய தனியார் நிறுவனம் 66 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 20,000 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த பின்னணியில், 05/01 மாலை 05.00 மணிக்கு மட்டும், சுமார் 10 இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்திற்கு வந்து விசா வழங்கத் தொடங்கினர், ஆனால், அன்றிரவு 08.30 மணி வரை விமான பயணிகள் நீண்ட வரிசையில் நின்றிருந்தனர், அந்த நேரத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கோபத்துடன் இருந்தனர்.

மீண்டும் இரவு 09.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் நீண்ட வரிசையில் நின்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஒழுங்கீனமாக நடந்துகொள்ள ஆரம்பித்ததாக குடிவரவு-குடியகழ்வு திணைக்கள பேச்சாளர் தெரிவித்தார்.

இதன் காரணமாக விமான நிலைய கடமைகளுக்குப் பொறுப்பான அதிகாரி, கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார், விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளும் விமான நிலையத்தின் வருகை முனையத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

பின்னர், இந்த இந்திய தனியார் நிறுவனத்தின் அதிகாரிகள் இரவு 11.30 மணியளவில் விசா வழங்குவதை தற்காலிகமாக நிறுத்திவிட்டு வசூலித்த பணத்துடன் விமான நிலையத்தை விட்டு வெளியேறினர்.

இதேவேளை, அன்றைய தினம் முதல் பழைய கட்டண முறையின் கீழ் வீசா வழங்குவதை ஆரம்பிக்குமாறு குடிவரவு குடியகழ்வு பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய, கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை வழங்கியிருந்தமையினால் தற்போது குடிவரவு குடியகழ்வு திணைக்கள அதிகாரிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர். நிலைமையும் வழமைக்குத் திரும்பியது.



# கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

கல்பிட்டி- கந்தகுடாவ பகுதியிலுள்ள வீட்டின் கிணற்றில் இரண்டரை மாத முகமது பாத்திமா சீமா எனும் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு வியாழக்கிழமை (02) காலை கிடைத்த தகவலையடுத்தே பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அந்த சிசுவின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

# யானைக் குட்டியின் சடலம் மீட்பு



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம்-கருவலகஸ்வெவ எகொடபிட்டிய பகுதியில் 3 மாத யானைக் குட்டியொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யானைக் குட்டியைப் பெரிய யானைகள் காலால் மிதித்துக் கொன்று இருக்கலாமென சந்தேகிப்பதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த யானைக் குட்டியைப் புதைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மண்டைதீவுக்கு களவிஜயம்

எஸ்.தில்லைநாதன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸூம் யாழ். மண்டைத்தீவு பகுதிக்கு புதன்கிழமை (01) கள விஜயத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது,கண்டல் தாவரங்களினால் இயற்கையாக அமைந்த நன்மைகள் பற்றியும், மண்டை தீவில் கண்டல் தாவரங்களின் பரம்பல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ள அனர்த்தத்தைத் தவிர்க்கவும், நீர் வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கவும் இப்பிரதேசத்தில் வளரும் கண்டல் தாவரங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

அந்தவகையில், அவ்வாறான பங்களிப்பை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இலவச தியான பயிற்சி

சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்றுத்தந்த ச.கோயங்கா அவர்களால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறைபற்றி மே 27ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

குரு ஜி.எஸ்.என். கோயங்காவின் வழிகாட்டலில் யாழ்ப்பாணம், பண்ட தரிப்பு, பாத்திமாரிட்ரீட்ஹவுஸில் மே 27ஆம் திகதி முதல் ஜூன் 07ஆம் திகதி வரை 10 நாட்கள் தியான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இவர்களது இலவசப் பயிற்சி நெறியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம். விபாசனா தியானமையத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள், 071-6439454, 077-3504491 மற்றும் 077-4935850 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். மேலும், sobha.dhamma.org என்ற இணையத்தில் முன்பதிவு செய்துகொள்ளவும் முடியும்.



# கைக்கெட்டியதை வாய்க்கும் எட்ட வழிசமைக்கவும்

ஒருவரின் நாளாந்த செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அந்தளவுக்கு நாட்டின் பொருளாதார பிரச்சினை இன்னும் தலைவிரித்து ஆடிக்கொண்டுதான் இருக்கின்றது. விலையேற்றத்துக்கு சமாந்தரமாக விலை குறைப்புகள் இடம்பெறவில்லை. அத்துடன், சம்பள அதிகரிப்புகளும் வழங்கப்படவில்லை. மேலதிக வருமானத்துக்கு மாடாய் உழைக்க வேண்டிய நிலையே உள்ளது.

உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள போதிலும் விற்பனை குறைந்துள்ளது. இதனால், முதலீடுக்கும் இலாபத்துக்கும் இடையிலான வித்தியாசம் பாரியளவில் அதிகரித்துள்ளது. அவற்றை ஈடுசெய்வதற்கு முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. பொருளாதார சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் வேலையை விட்டுவிட்டு, வெளிநாடுகளுக்குப் பறந்துவிட்டனர். இன்னும் பறந்துகொண்டுதான் இருக்கின்றனர்.

பெருந்தோட்டங்களை பொறுத்தவரையில் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமையால் பெரும்பாலான மக்கள், பெருநகரங்களுக்குப் படையெடுத்துவிட்டனர். தோட்டங்களில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாகும். தோட்டங்களில் பணிபுரிவோரைத் திருமணம் முடிப்போரும், தோட்டத் தொழில்துறையை விரும்புவதில்லை.

தங்களுடைய உழைப்புக்கு ஏற்றவகையில் ஊதியம் கிடைப்பதில்லை. தலைநகர் உள்ளிட்ட வெளி பிரதேசங்களில், மூவேளை உணவு, தங்குமிட வசதியுடன் கையில் பணம் புரளும் வகையில் சம்பளம் கிடைப்பதால், தோட்டத் தொழில்துறைகளை வெறுக்கின்றனர். எனினும், இருப்புக்காகத் தோட்டங்களை நாடியிருக்கவேண்டிய நிலைமையில் பலரும் உள்ளனர்.

இந்நிலையில்தான், கொட்டகலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய மே தின கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, “தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக, 1,700 ரூபாய் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

அந்த அறிவிப்பு வெளியாவதற்கு சில மணிநேரத்துக்கு முன்னரே வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. அதில், நாளாந்த சம்பளம் 1,350 ரூபாயாகும். நாளாந்த விசேட படி 350 ரூபாயாகும். அதனடிப்படையில் மொத்தமாக 1,700 ரூபாய் வழங்கப்படும் என்றும் மேலதிகமாக பறிக்கப்படும் ஒவ்வொரு கிலோ கிராம் தேயிலைக்கும் வெட்டப்படும் ஒவ்வொரு கிலோ கிராம் இறப்பர் பாலுக்கும் 80 ரூபாய் வழங்கப்படுமென அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவித்தல் வெளியான ஒருசில மணிநேரத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுத்த முதலாளிமார் சம்மேளனம். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் சம்பள நிர்ணய சபை தங்களுடைய எவ்விதமான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை. அதனால், அதிகரிக்கப்பட்டுள்ள அந்த தொகையை (நாளொன்றுக்கு 1,700 ரூபாய்) வழங்கமாட்டோம் என்றும் வர்த்தமானிக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் அறிவித்துள்ளது.

நீதிமன்றத்தை நாடினால், மனுதாரர்களுக்கு ஆரம்ப தீர்வாக, வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்படலாம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின், தொழிலாளர்களால் பட்டாசு கொளுத்தியமைக்கு எவ்விதமான பிரயோசனமும் கிடைக்காது. வெறும் மே தின கொக்கரிப்பாகவே இருக்கும். ஆகையால், கைக்கெட்டியதை வாய்க்கும் கிடைக்க உரிய தரப்பின் வழிசமைக்க வேண்டும் என்பதே எங்களுடைய அவா.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சிரிக்காதவன் தன்னைச் சுருக்கிக்கொள்கின்றார். அக உணர்வினூடாக ஏற்படும் கிளர்ச்சி, புன்னகை, சிரிப்பாகப் பரிணமிக்கின்றது.

நகைப்பூட்டும் விடயங்களைக் கேட்கும் போதும் குழந்தைகளின் குறும்பை முறுவல்களை நோக்கும் போதும் மெல்லிய சிரிப்பு தானாகவே உருவாகின்றது.

சிலர் நகைச்சுவைகளைக் கேட்டதுமே பலத்தை ஓசையுடன் சிரிப்பதுண்டு. திரைப்படங்களில் வில்லன்களின் பார்வையுடன் கூடிய நகைப்பு சற்று வித்தியாசமானது. அடக்கமுடியாத தொடரான சிரிப்பும் ஒரு ரகம்.

ரசனை உள்ள விஷயங்களைக் கூட சிலர் கண்டு கொள்ளவே மாட்டார்கள். உம்மென்று எதுவும் தெரியாததைப் போல இருப்பதுண்டு. இன்னும் சிலருக்கு நகைச்சுவையின் அர்த்தமும் புரிவதில்லை.

சிரிப்பு, ஆனந்தத்தின் இருப்பிடம் ஏன் பிறப்பிடமும் கூட. மனிதன் தனது வாழ்க்கையைச் சந்தோஷமாக வைத்திருக்க கலகலப்பூட்டும் வார்த்தைகளை அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அர்த்தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். கவலைகள், ஏக்கங்களைக் களையச் சுதந்திரமாக ரசனையுடன் சிரிப்பீர்களாக.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

### கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 50:

# வலுக்கும் இன முரண்பாடும் வன்முறைகளும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதன் விளைவுகளை சில ஆண்டுகளிலேயே நாடு சந்தித்தது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தனர். வேலையின்மை, விலைவாசி என்பன கடுமையாக அதிகரித்தன.

இதைச் சந்திக்க இயலாமலும் பொருளாதாரத்தைச் சீர்படுத்த இயலாமலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தடுமாறினார். இதனால் மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப இன முரண்பாடுகளைத் தூண்டினார்.

1970களின் நிறைவுப் பகுதியில் இன முரண்பாடு புதிய வடிவத்தை எடுக்கத் தொடங்கியது. ஜெ.ஆர்.ஜெயவர்த்தன 1977 தேர்தலில் இல் தனக்குக் கிடைத்த அரசியல் ஆணை, பொருளாதார மற்றும் போர்க் குணமிக்க பிரிவினைவாதிகளின் அடக்குவது ஆகியவற்றுக்கானது என்பதை உறுதியாக நம்பினார். இதனால் தமிழர்களின் குறைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அவர் விரும்பவில்லை.

1976 முதல் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணியை அதிகம் பகைக்காமலிருந்த ஜெயவர்தன கூட்டணித் தலைமை தட்டிக்கேட்கத் துணிந்தால் கடுமையான எதிர்வினையாற்றத் தயங்கியதில்லை.

1977இல் பேரினவாத வன்முறை பற்றி அமிர்தலிங்கம் முறைப்பட்டதற்கு எதிர்வினையாக “போர் என்றால் போர். அமைதி என்றால் அமைதி” என்று செய்த பிரகடனமானது அவரது அகங்காரத்தின் வெளிப்பாடு. 1977 முதல் 1983 வரை இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் படிப்படியாகக் குறைந்துவிட்டன.

தமிழ் இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையும் தீவிரமும் அதிகரித்தது. வட மாகாணத்தில் 1975 முதல் 1981 வரை 20 பொலிஸ் அதிகாரிகள், 3 அரசியல்வாதிகள் மற்றும் 13 பொதுமக்கள் (பெரும்பாலும் பொலிஸ் தகவல் வழங்குபவர்கள்) தமிழ்ப் போராளிக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களைத் தோற்கடிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் மோசமான வன்முறையில் ஈடுபட்டதன் மூலம் எதிர்ப்பை வளர்த்தது. பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979இல் நிறைவேற்றியது. இது 1982இல் நிரந்தரச் சட்டமாக மாறியது. பாதுகாப்புப் படைகளுக்கு இது பரந்த அதிகாரங்களை வழங்கியது.

பாதுகாப்புப் படைகள் ஏற்கெனவே 1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சியை மிருகத்தனமாக ஒடுக்குவதிலும் வேலை நிறுத்தத்தை முறிக்கும் நடவடிக்கைகளிலும் தங்களின் ஒழுக்கமின்மையையும் பற்றாக்குறையையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இப்போது அவர்கள் தமிழ்ப் போராளிக் குழுக்களை ஒடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் தமிழ் பேசாதவர்கள், சிங்கள-பௌத்த அடிப்படைவாதிகளின் தொடர்ச்சியான சரமாரியான பிரசாரத்திற்கு ஆட்பட்டவர்களாக இருந்தனர்.

இதன் விளைவாகப் பாதுகாப்புப் படையினரால் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், காணாமல் போதல்கள், கைதிகளைத் துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவல் போன்ற பல முறைகேடுகள் நடந்தன. இதை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

இதேவேளை, ஒப்புக்கு ஒரு தீர்வாக அரசாங்கம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை முன்மொழிந்தது. சிங்கள-பௌத்த தேசியவாதிகளால் எதிர்க்கப்பட்ட நிலையில் தீர்வு தொடர்பில் எவ்வித விட்டுக்கொடுப்புகளை அரசாங்கத்தால் செய்ய முடியவில்லை. 1980 வழங்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உண்மையில் கூட்டணியைக் கேவலப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்பதைக் கூட்டணித் தலைவர்கள் பகிரங்கமாக ஏற்க விரும்பவில்லை.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டம் ஆகஸ்ட் 1980இல் அங்கீகரிக்கப்பட்டது, மற்றும் முதல் தேர்தல்கள் ஜூன் 4, 1981இல் நடத்தப்பட்டது. இருப்பினும், உள்ளூர் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நிதி ஆதாரங்கள் அவர்களிடம் இல்லை அல்லது தொடங்குவதற்கான அதிகாரம் இவ்வாறு உருவாக்கப்படும் சபைகளுக்கு இல்லை என்ற உண்மை விளங்க நாளெடுத்தது.

ஆனால், எதிர்க்கட்சி ஆசனங்களிலிருந்து சுகபோகங்களை அனுபவித்த தமிழர் விடுதலைக் கூட்டணி இதை ஒரு வெற்றியாகவே காட்ட முயற்சி செய்தது. அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் போக்கிற்குக்கூரிய சிறந்த சாட்டாகக் கூட்டணி மாவட்ட அபிவிருத்தி சபைகளைக் காட்டியது.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு முன்னதாக இனவாத வன்முறைகள் இடம்பெற்றன. யாழ்ப்பாண அபிவிருத்திச் சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதோடு, பொலிஸ் உத்தியோகத்தரும் கொல்லப்பட்டுள்ளார். விரக்தியடைந்த பொலிஸார் கலவரம் செய்தனர்.

அவர்கள் மத்திய சந்தையையும் சில அரசியல்வாதிகளின் வீடுகளையும் எரித்தனர், நினைவுச் சின்னங்களைச் சேதப்படுத்தினர்.

இதன் தொடர்ச்சியாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டது. இது நிகழ்ந்து ஆறு வாரங்களுக்குப் பின்னர், சிங்களக் கூலிக் கும்பல் தமிழ்த் தொழிலாளர்களைத் தாக்கியது, குறிப்பாகத் தோட்டங்களிலிருந்து சிங்கள நகரங்கள் மற்றும் கிராமங்களில் வேலை செய்ய வந்தவர்கள் மீது வெறித்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றன.

5,000க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் தங்கள் வாழ்விடங்களில் இருந்து தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இந்த இன வன்முறை தொடர்பான செய்திகள் வெளியுலகுக்குத் தெரியாத வண்ணம் அரசாங்கம் கடுமையான தணிக்கையில் ஈடுபட்டது. இந்நிலையில், இலங்கையில் செய்தியாளராக இருந்த பிரித்தானியரான பிரையன் ரூடவ்ட்ஸ் இவ்விடயம் தொடர்பில் எழுதிய *The cover up that Failed - The Prohibited Report From Colombo* என்ற தலைப்பில் அமைந்த செய்தியொன்றை லண்டன் ஒப்ஸ்ஸேவர் பத்திரிகை செப்டெம்பர் 20ம் திகதி வெளியிட்டது. அச்செய்திக்குறிப்பு பின்வருமாறு தொடங்குகிறது:

“நான் வெள்ளிக்கிழமை இரவு லண்டனுக்கு டெலெக்ஸ் அனுப்ப முயன்ற அறிக்கை,பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், இலங்கையின் காவல்துறை கைப்பற்றப்பட்டது. நான் அதை அனுப்ப அனுமதிக்கப்படவில்லை. வேறு எந்தச் செய்தியையும் அனுப்ப இயலாது. எனது மூலப்பிரதி எனக்குத் திருப்பித் தரப்படாது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவே இந்த முடிவை எடுத்தார். பொலிஸ், இராணுவம் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் வெட்கப்பட வேண்டியவை ஏராளம். அவர்கள் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் துருவியறியும் கண்களிலிருந்து மறைக்க வேண்டியவை அதிகம். சிறுபான்மை தமிழ் சமூகத்தின் “தாயகமான” யாழ்ப்பாணத்தின் வடக்கு நகரத்தில் ஜூன் மாதம் சூறையாடுதல் மற்றும் தீவைத்தல் ஆகிய களியாட்டங்கள் அப்பகுதியில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள பௌத்த காவல்துறையினரால் திட்டமிட்டு நடத்தப்பட்டது. என்பது இப்போது உறுதியாகியுள்ளது. நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மற்றும் மத்திய பிராந்தியத்தில் உள்ள இந்தியத் தமிழ் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்ட வன்முறைகள் தற்செயலானவை அல்ல என்பதும் தெளிவாகிறது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களால் அது தூண்டப்பட்டு, சில சந்தர்ப்பங்களில் ஒழுங்கமைக்கப்பட்டது, இதைச் செய்தவர்கள் ஜனாதிபதிக்கு மொத்தத்தில், 25 பேர் இறந்தனர், ஏராளமான பெண்கள் கூட்டுப் பலாத்காரம் செய்யப்பட்டனர், ஆயிரக்கணக்கானோர் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டனர், அவர்கள் தமது அற்ப உடைமைகள் அனைத்தையும் இழந்தனர்.”

இது 1980களின் தொடக்கத்தில் அரசாங்கத்தின் திட்டமிட்ட வன்முறையின் ஒரு கோணத்தைத் தெளிவுடன் பிரதிபலிக்கிறது. ஜெயவர்தனவின் அடுத்த சனநாயக விரோத நகர்வு பாராளுமன்ற வரலாறு காணாத ஒரு அதிரடி நடவடிக்கையாயிற்று.

1982இல் ஜனாதிபதித் தேர்தலில் தனது வாக்களிப்பு வலிமையின் அடிப்படையிற் பார்த்தபோது, அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தனக்கு உடன்பாடான ஒரு வலிய பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பொதுத் தேர்தல் மூலம் வெல்லும் வாய்ப்பு இல்லை என்பதை அறிந்த அவர், தனது ஐந்தில் நான்கு பெரும்பான்மையை மேலும், ஆறு ஆண்டுகட்கு நீடிக்குமுகமாக நான்காவது சட்டத்திருத்தத்தை நிறைவேற்றி ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத்தின் ஆயுளை மேலும் ஆறு ஆண்டுகள் நீடிப்பதற்கு முயன்றார்.

இந்த முயற்சி அடிப்படையிற் சனநாயக விரோதமானது. அவ்வாறான ஒரு சர்வஜன வாக்கெடுப்பு சாதாரண பெரும்பான்மையின் அடிப்படையில் ஆளுங் கட்சியின் பாராளுமன்றப் பெரும்பான்மையை ஐந்தில் நான்காகப் பேணுவது மிகவும் நியாயமற்றது எனினும், அவ் வாக்கெடுப்பு நடந்தது.

தெற்கிலிருந்த எதிர்க்கட்சிகள் அதை எதிர்த்தனர். வடக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி தடுமாற்ற நிலையிலிருந்தது. எதிர்க்கட்சித் தலைவராயிருந்த அமிர்தலிங்கம் உட்பட்டோர் ஜெயவர்தனவைப் பகைக்க விரும்பவில்லை.

ஆனாற் குடாநாட்டில் இருந்த சனநாயக சக்திகளின் தீவிர பிரசாரத்திற்கு முன் அவர்களால் தமது நழுவற் போக்கிற் தொடர இயலவில்லை. வடக்கின் அனைத்து முற்போக்காளர்களும் தமிழ்த் தேசியவாதிகளில் ஒரு பகுதியினரும் அந்தச் சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கப் பிரேரணைக்கு எதிராகக் கடும் பிரசாரம் செய்தனர். அதில் ஈழநாடு பத்திரிகை நிறுவனமும்; ஆங்கில வார ஏடான சற்றடே றிவ்யூவும் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் நாடளாவிய மட்டத்தில் 55% வாக்குக்கள் பெற்று வென்றது. எனினும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் மக்கள் அந்தச் சனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராகத் தமது உறுதியான எதிர்ப்பைக் காட்டினர் என்பது முக்கியமானது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைக்குப் பின்பு அரசாங்கத்தின் பேரினவாதப் போக்கும் குடாநாட்டில் இராணுவத்தின் அடாவடித்தனங்களும் படிப்படியாக வலுத்தன. மாவட்ட அபிவிருத்தி சபை பற்றிய பொதுவான வெகுசன அதிருப்தி இளைஞர் இயக்கங்களின் செயற்பாட்டை வலுப்படுத்தியது. கூட்டணித் தலைமையின் நிலைமை மேலும் சங்கடமாயிற்று. இலங்கையின் வடபுலத்தில் வன்முறை தடுக்கப்படவோ தவிர்க்கப்பட இல்லை.

இது இன முரண்பாட்டை போர் என்ற தளத்தை நோக்கி நகர்த்தத் தொடங்கியது.

## கடிதங்கள்

### பஸ் சேவை இல்லாததால் மக்கள் தவிப்பு



நயினாதீவு பகுதியில் சேவையில் ஈடுபட்டு வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் பழுதடைந்துள்ளமையால் பஸ் சேவைகள் இன்றி பலரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த பகுதியில் ஒரு பஸ் மட்டுமே சேவையில் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்ததுள்ளது. நயினாதீவிற்கு வேலைக்குச் செல்வோர், சுற்றுலா செல்வோர் மற்றும் பிரதேசவாசிகள் என பலரும் தீவினுள் தமது போக்குவரத்திற்கு பஸ் சேவையையே பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், சேவையில் ஈடுபட்டு வந்த பஸ் பழுதடைந்துள்ளமையால் பஸ் சேவை இன்றி பலரும் கால் நடையாகவே தமது பயணத்தைத் தொடர வேண்டிய நிலைமை காணப்படுகிறது. எனவே விரைந்து பஸ் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– எஸ்.தில்லைநாதன்

# ICT ரத்னதீப கொழும்பில் திறந்து வைப்பு



'ICT ரத்னதீப' ஆடம்பர ஹோட்டல் தொகுதி இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையை வளப்படுத்தும் வகையில் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ICT ஹோட்டல் குழுமத்தின் விருந்தோம்பலின் பிரதான சின்னமாக விளங்கும் ICT ரத்னதீப ஆடம்பர ஹோட்டல் தொகுதி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஷா மற்றும் ICT Ltd இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்ஜீவ் பூரி ஆகியோரின் பங்குபற்றலுடன் அண்மையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய மலரான நீல அல்லி மலரிடமிருந்து கிடைத்த அகத்தூண்டலக்கு அமைய அதன் கலையம்சங்களை மீண்டும் நினைவூட்டும் வகையில் இந்த ஆடம்பரம் மிக்க இடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ICT ரத்னதீப அல்லது "இரத்தினங்களின் தீவு" விருத்தினர்களுக்காக 352 அறைகள், கூடத் தங்களை (Suite) மற்றும் தொடர்மாடி வீடுகள் (Apartments) ஆகியவற்றைக் கொண்டமைந்திருப்பதுடன், ஒவ்வொரு அறைக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள பல்கணிகள் கடற்கரையின் அற்புதமான காட்சியை உங்கள் கண்முன்னால் கொண்டுவரும்.

இந்த ஆடம்பர ஹோட்டல் தொகுதியின் ஒரு பக்கம் இந்து சமுத்திரத்தின் கரையோரமும், மறுபக்கம் பேர வாவியும் அமைந்திருப்பதுடன், ITC ரத்னதீப ஹோட்டல் தொகுதி மற்றும் Sapphire Residences ஆடம்பர தொடர்மாடிக் குடியிருப்புத் தொகுதி ஆகிய இரு நட்சத்திர கோபுரங்களும் சிறந்த விருந்தோம்பலை வழங்குகின்றன.

100 மீற்றர் உயரத்தில் இந்த இரண்டு கோபுரங்களையும் இணைக்கும் அதிநவீன தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ள 'அஹச' வான் பாலம் கட்டடக் கலையின் சிறப்பம்சத்தைப் பறைசாற்றுகின்றது.

ITC ரத்னதீப திறப்பு விழாவில் கருத்துத் தெரிவித்த ITC Limited நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான சஞ்ஜீவ் பூரி குறிப்பிடுகையில், "நுகர்வோர் பொருட்கள், ஹோட்டல்கள் காகித அட்டைகள் மற்றும் பொதியிடல், வேளாண்மை வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு வணிகங்களைக் கொண்ட இந்தியாவின் முன்னணிக் குழுமங்களில் ஒன்றே ITC ஆகும்.

நிலத்தில் வேறூன்றுதல் மற்றும் பிராந்தியத்தின் தனித்துவமான கட்டடக்கலை, வலுவான காலாசரம் மற்றும் மகத்துவத்தைப் பிரதிபலித்தல் என்ற ITC ஹோட்டல்களின் தத்துவத்தால் ஈர்க்கப்பட்டு, இந்தக் கம்பனி கடந்த பல வருடங்களில் இந்தியா முழுவதும் தனித்துவ சின்னங்களாக விளங்கும் ஆதனங்களை உருவாக்கியுள்ளது.

நேர்த்தியான தங்குமிடத்திற்கு மேலும் வசதிகளை வழங்கும் வகையில் ITC ரத்னதீப, உள்நாட்டு, தேசிய மற்றும் உலகளாவிய உணவு குடிபானங்களுக்கு 9 தனித்துவமான இடங்களை ஏற்பாடு செய்துள்ளது.

உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற உணவுகளுக்கான தெரிவுகளைக் கொண்ட Peshawri உணவகம் வடமேற்கு பகுதியில் புகழ்பெற்ற உணவுகளை வழங்கும் விருது பெற்ற உணவகமாகும்.

ஆசியாவில் சிறந்த உணவகமாக கருதப்படும் Avartana, உணவு வகைகளுக்குப் புதிய விளக்கத்தை வழங்குகின்றது. ரத்னதீபவின் Indian Ocean Pavilion பகுதியானது, சிறந்த புஃபே உணவுத் தெரிவுகளுடன் இந்து சமுத்திரத்தின் சிறந்த கண்கவர் காட்சியையும் வழங்குகின்றது.

இங்கு காணப்படும் ஏனைய உணவு வகைகளின் வர்த்தக நாமங்களில் சீனாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தான காலத்துக்கு ஏற்ற Yi Jing உணவு ரெசிப்பிகள், சிறந்த கடல் வளத்தின் சுவைகளைப் பறைசாற்றும் Silvertips, இலங்கையின் உயர்ந்த ஹை டீ கலாசாரத்தைக் கொண்டாடும் வெப்பமண்டலத்தைச் சார்ந்த புதிய ஜூஸ் மற்றும் ஆரோக்கியமான உணவுகளுக்கான Jala Anganaya என்பன அடங்குகின்றன.

இலங்கையின் மகத்தான சுற்றுலாத் திறன் மற்றும் அதன் தேவைகளை உணர்ந்து MICE மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை ITC ரத்னதீப இலக்காகக் கொண்டுள்ளது.

40,000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ITC ரத்னதீபவின் விருந்து மண்டபம் மற்றும் அதற்கான உணவுகள் இந்த நோக்கத்துக்கு அர்த்தமளிக்கின்றன. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உணவு மற்றும் செயற்பாட்டு இடங்கள் பெருநிறுவனங்களின் ஒன்றுகூடல்கள், திருமணங்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ITC ரத்னதீப ஹோட்டல் பெருத்தமானது என்பதைப் பறைசாற்றுகின்றன.

இந்த வசதிகளில் பிரத்தியேகமான Sangam Ballroom 15,000 சதுர அடி விஸ்தீரணத்தில் தூண்கள் அற்ற விருந்து மண்டபம் மற்றும் Panorama Deck வெளியக திருமண இடம் என்பனவும் அடங்குகின்றன.

சிறந்த விருந்தோம்பல் அனுபவங்களுக்கு அப்பால், விவேகமான நுகர்வோருக்கு சிறந்த சொகுசு குடியிருப்புக்களையும் இத்திட்டம் வழங்குகின்றது. Sky Mansions (வான் மாளிகை) என்ற எண்ணக்கருவை தெற்காசியாவுக்கு அறிமுகப்படுத்தும் Sapphire Residences MdJ, ITC ரத்னதீப ஹோட்டல் வளாகத்திற்கு அருகாமையில், கொழும்பில் மிகவும் கண்கவர் கடல்

காட்சியை ரசிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ள ஆடம்பரமான மற்றும் விசாலமான அடுக்குமாடி குடியிருப்புக்களைக் கொண்ட தொகுதியாகும். இந்து சமுத்திரத்தை 180 பாகையில் பார்வையிடக் கூடிய வகையில் கொழும்பில் அமைந்துள்ள நிகரற்ற சொகுசு தொடர்மாடிக் குடியிருப்புக்கள் அதன் குடியிருப்பாளர்களுக்குத் தடையற்ற காட்சிகளை வழங்குகின்றது.

ITC ஹோட்டல்களின் வரிசையில் ITC ரத்னதீப 16ஆவது ஆடம்பர ஹோட்டலாக அமைகின்றது. ஆடம்பரமான ஹோட்டல்களில் உலகின் முன்னணி வர்த்தக நாமங்களில் ஒன்றான Marriott International நீடித்து நிலைக்கக் கூடிய பொக்கிஷமான நினைவுகளைத் தூண்டும், தனித்துவமான, உண்மையான அனுபவங்களை வழங்கும் உலகப் புகழ்பெற்ற ஹோட்டல்கள் மற்றும் ஓய்வு விடுதிகளைக் கொண்டுள்ளது.

ஆடம்பர வர்த்தக நாமங்கள் இலங்கைக்குள் நுழைவதை ITC ரத்னதீப குறிக்கின்றது. இந்த ஆடம்பர ஹோட்டல்கள் உலகின் ஹோட்டல் லோயலிட்டி திட்டத்தைக் கொண்ட Marriott Bonvoy இன் ஒரு பகுதியாகும்.



## காத்திருப்பு...

வார்த்தைகளால் கொட்டித் தீர்க்க
முடியாத பொக்கிஷங்கள் என்
பயணத்தில் உன் நினைவலைகள்...!

என்னைத் தாங்கிப் பிடித்து
கலங்காதேஎன்றுஉலகையே
மீட்டுக் கொடுத்த உன்னத உறவு நீ...!

பாசமழை பொழிந்து மதிமயங்கி
ஒன்று கலந்த நெஞ்சங்கள் மறக்க
மறந்து புலம்பித் தவிக்குதே...!

நீ பேசா தஒவ்வொரு பொழுதும்
நரகமாகி நகர்கின்றதே என்னானதோ
எதானதோ என்ற ஏக்கத்துடன்...!

உலகமே இருண்ட மனிதனின்
வாழ்வில் ஒளியைப் பாய்ச்சிவிட்டு
இருளில் தள்ளுவதுதகுமா...!

உயிர் கரைந்துகசியும் நிமிடங்கள்
ஆழியின் கரைகளில் சேர்த்துவிட்டு
அதற்கே எனை கொடுப்பதுதகுமா...!


உன்னால் முடியும் என்றுதட்டிக்
கொடுத்து பட்டை தீட்டிய நாட்களும்
கசந்துபோகுதே...!

முடக்கியவழிகள் நேராக்கி
பிறவியின் அர்த்தம் சொல்லிய
வாழ்கை வலுவிழந்து தவிக்குதே...!

சுவாசம் இன்றித் தவிக்கும் உயிரின்
ஏக்கம் அறிந்து உயிர் கலந்து
மூச்சுக் காற்றை அளிப்பாயோ...!

-தௌபீக் முஹம்மதுநவீத்-
(புல்மோட்டையூரான்)





## கோட்டைமான்

திருமலையில் ஒருகூட்டம்
மான்கள்
தெய்வத்தின் சன்னதியில்
அதன் ஊண்கள்
பெருமலையோபெருங்காடோ
இல்லாச் சிறுவெளிகள்
அப்பெருமானின் அருளொன்றே
அவை வாழ வழிகள்...
புலம்பெயர்ந்த இனமாகப் பார்த்தேன்
புதிதாகப் பார்த்தன்றுநன்குவியந்தேன்
போர்க்காலத் தற்காப்போ
எனவெண்ணி நான் நயந்தேன்
பொல்லாத இடத்திலும்
அவை போய்வரப் பயந்தேன்...
உல்லாசப்பிரயாணி ஒவ்வொன்றாய்
ரசிக்கின்றார்
உள்ளூர்ப்பிரயாணி ஒவ்வொன்றாய்
ருசிக்கின்றார்
கொல்லாமைஅணியினர் குழையிலை
கொடுக்கின்றார்
கோர வெயிலுக்குள் யாரோ தண்ணீர்
கொடுக்கின்றார்...
பாய்ந்தோடிப் பழக்கமற்றமிருகம்
பற்றையிலே மறைந்திராதஉருவம்
மேய்ந்து இரையெடுக்காப் பலபருவம்
மெல்லவே விளையாடும் பலதருணம்.
மிருதுவான நிலத்தை மிதிக்காத
கால்கள்
மிருகவகை பலவற்றைக் காணாத
கண்கள் அரியவகை இனமாகப்
பெருகிவரும்
மான்கள் அருகிவிட முடியாது
காக்க வேண்டும் இதைக் கோன்கள்.

-நீலையூர் சுதா-



## ஒற்றுமைக்கு ஏது வழி?

நாங்கள்
கங்குளுக்குள் ஒழிந்து
கதைகள் பலபேசினாலும்
திங்களுக்குள் வந்து
வந்துதிரும்பிடாத வழியிருக்கா..?

எங்களிடம்
மூன்று திங்கள் செடியொன்று
பூத்துகாய்த்த கனியொன்று
கருகிப்போனகதை இருக்கு
காரணத்தின் விடை இருக்கா...?

நாங்கள்
வாழ்வது குறு நாட்டில்
கற்பது ஒரு ஏட்டில்
சொல்வதுஒருபாட்டில்
காண்பது சுடு காட்டில்
செயலது பனங்காட்டில்
பாவலர்க்கு நினைவிருக்கா...?

எங்களிடம்
ஒன்றை ஒன்று ஒதுக்கினாலும்
ஒன்பதை ஒன்று ஒதுக்கினாலும்
குண்டுச்சட்டி இராச்சியத்தில்
மிஞ்சுவது பூச்சியம் தான்
மதில் சுவரை இடித்துவிட்டு
மனம்திறக்க குணம் இருக்கா...?

எங்களிடம்
என்னைநானேகேட்கும் போது
உன்னை நீயேகேட்டுக் கொண்டால்
என்னிடமேதும் கேட்கவேண்டாம்
எதிர்காலத்தில் நம்மை நாமே கேட்டுக்
கொள்ள
எப்போதுமே ஒளி இருக்கா...?

-ரவிக்காந்தன்-
திருகோணமலை





## வலையில் சிக்கியஅலை

கடலைதனக்குள் அடக்கிய
பெருமிதம்
கண்களால் கசியும் பொழுது

ஒரு உயிரை கவ்விப்பிடித்து
இடைவெளியை
நிரப்ப பழகிய
வலையை தடவிப் பார்க்கிறேன்...

மிதப்புக் கட்டையின் அளவில்
தன் ஆழத்தை
அளந்து
கரையேறிநீட்டிநிமிர்ந்துகிடக்கிறது...

மணல் சூட்டில்
உறங்கி
உயிர்ப்பித்தபொழுதுகளில்

வயிற்றுப் பசிகளை
விரித்தகைகளுக்கு
நிறைத்ததை தவிர

எந்த குற்றமும் புரியாத வலையில்
ஒருஎளிய
அன்புக்காக வேனும்
இதுவரை ஏனோ சிக்கவில்லை
இந்தமாகடல்...

- காரையன் கதன்-





# ‘அரசறிவியலாளன்’ வெளியீடு



■ எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் ஒன்றியத்தின் இதழான ‘அரசறிவியலாளன்’ 06ஆவது இதழ் வெளியீட்டு விழா கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் தலைவர் சு.டிலக்சன் தலைமையில் இடம்பெற்றது.







# ‘ஈஸ்டர் படுகொலை’ நூல் வெளியீடு

■ வ.சக்தி

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கினைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை இன மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும் நூல் வெளியிட்டு விழா மட்டக்களப்பில் இடம்பெற்றது.

# ‘எல்லைப்புறம்’ நாவல்





இலங்கையின் முன்னணி எழுத்தாளரான சி.வி.வேலுப்பிள்ளை 1962இல் எழுதி தினகரனில் வெளிவந்த எல்லைப்புறம் என்ற நாவல், அவர் மறைந்து 40 ஆண்டுகளுக்குப் பின்னர் கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழு சார்பில் பேராசான் மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகிய இருவரும் இணைந்து தமிழகத்தில் வெளியிட்டுள்ளனர்.

தற்போது தமிழகத்தில் வெளி வந்திருக்கும் ‘எல்லைப்புறம்’ என்ற சி.வியின் நூல் அவரின் இன்னுமொரு பக்கத்தை வாசகர்களுக்குத் திறந்து காட்டும். எல்லைப்புறம் என்ற நாவலின் வெளியீட்டு விழா மே மாதம் லண்டனிலும் ஹட்டனிலும் கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் நடைபெற இருக்கிறது. லண்டனில் வாழும் எச்.எச்.விக்ரமசிங்கவின் புதல்வர் சங்கர விக்ரமசிங்க இந்நூலுக்கான அனுசரணை வழங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ‘நாட்டார் வழக்காறுகள்’

■ வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி கிராமத்தைச் சேர்ந்த கலைச்சுடர் இலக்கிய வித்தகர் ஒய்வு நிலை அதிபர் நாராயணபிள்ளை நாகேந்திரன் எழுதிய நாட்டார் வழக்காறுகள் எனும் நூல் வெளியீட்டு விழா கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியீட்டு வைக்கப்பட்டது.














# ‘follow me’ நூல் வெளியீட்டு விழா!

■ வி.ரி.சகாதேவராஜா

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் வருடாந்த அமுலாக்க திட்டம்( followme) என்ற நூல் வெளியீட்டு விழா திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளரான நுஸ்ரத் நிலோபரா தலைமையில் நடைபெற்றது.

# ‘சட்டமும் நீங்களும்’ நூல் வெளியீடு

■ அப்துல்சலாம் யாசீம்

நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையத்தினால் சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் எழுதிய ‘சட்டமும் நீங்களும்’ எனும் நூலின் 25வது பதிப்பான 2022 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்த) சட்டத்தின் சிறப்பம்சங்கள் எனும் தொகுதியின் வெளியீட்டு நிகழ்வு திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள லோயோலா பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.









# ‘விபுல விருட்சம்’ நூல்

■ வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40 வருட நிறைவை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட ‘விபுலவிருட்சம்’ KSC@40 என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

# ‘கடாட்சம்’ நூல் வெளியீடு

■ அ.அச்சுதன்

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் ‘கடாட்சம்’ நூல் வெளியீடும் இலக்கியப் பணிக்கான பாராட்டு நிகழ்வும் மார்ச் திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.












# நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்வுகள்


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வில், விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள்...

– வி.ரி.சகாதேவராஜா





























சீனா


மலைப்பாதை சரிந்து விழுந்ததில்

# 24 பேர் பலி

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் மலைப்பாதை வீதி சரிந்து விழுந்ததில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் வடக்கு மீஜோ நகரின் டாபு கவுண்டியில் மலையில் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை (01) அதிகாலை 2 மணியளவில் அங்கு திடீரென மிகப்பெரிய பள்ளம் ஏற்பட்டு, ஏறக்குறைய 18 மீற்றர் அளவுக்கு மலைப்பாதை சரிந்து விழுந்துள்ளது.

இச் சம்பவத்தில் 20 வாகனங்கள் மற்றும் 54 பயணிகள் சிக்கிக் கொண்டதாகவும், சிக்கி கொண்டவர்களில் 24 பேர் பலியாகியுள்ளனர் என்றும்



30 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஹாங்காங்கை தளமாகக் கொண்ட சவுத் சைனா தகவல் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, சீனாவில் 5 நாள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால், ஏராளமான மக்கள் அங்கு சென்றபோது விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் சிக்கிய வாகனங்கள் தீப்பற்றி எரியும் காணொளிகளும் வெளியாகியுள்ள நிலையில், தொடர்ந்து அந்த நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

அண்டார்டிகா

எரிமலையிலிருந்து தினமும் 5 இலட்சம்

## தங்கத் துகள்கள் வெளியேற்றம்



அண்டார்டிகாவின் எரிமலையில் இருந்து தங்கத் துகள்கள் வெளியேறுகின்ற ஆச்சர்ய தகவல் வெளியாகியுள்ளது.

முழுக்க பனி பாறைகளால் சூழப்பட்டுள்ள கண்டம் என்றாலும், அண்டார்டிகாவிலும் நெருப்பை கக்கும் 138 எரிமலைகள் இருக்கின்றன. இவற்றுள் 8 எரிமலைகள் அவ்வப்போது லாவா குழம்பை வெளியேற்றி உயிர்ப்புடன் இருப்பவை.

அதில் ஒன்றுதான் ரோஸ் தீவில் உள்ள மவுண்ட் எரிமலை. 1972 முதல் நெருப்பு குழம்பை வெளியேற்றி வரும் இந்த எரிமலை பகுதியில் ஆய்வகம் ஒன்றையே அமைத்து ஆய்வு செய்து வருகிறது அமெரிக்கா.

இந்த எரிமலை செயற்கை கோள் புகைப்படங்களை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்றுள்ளனர். அதாவது, வாயு மற்றும் தூசு துகள்களுடன் தங்க துகள்களையும் எரிமலை வெளியேற்றி வருவதை அவர்கள் கண்டறிந்துள்ளனர். இதன்படி, ஒவ்வொரு நாளும் 5 இலட்சம் மதிப்பிலான தங்க துகள்களை இந்த எரிமலை வெளியேற்றி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் எரிமலையை சுற்றி 1,000 கிலோ மீற்றர் வரை தங்க மழை போல தங்க துகள்கள் கொட்டிக் கிடக்கின்றன. எரிமலை பாறைகளில் தங்க படிமங்கள் இருக்கலாம் என்றும் எரிமலை சீற்றத்தின் போது லாவா குழம்புடன் துகள்களாக தங்கம் வெளியேறி வருவதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மேலும், இதன் செயற்கை கோள்களை ஆய்வு செய்தபோது, எரிமலையின் உச்சியில் லாவா குழம்பால் மிகப்பெரிய ஏறி உருவாகி இருப்பதையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வொஷிங்டன்

அமெரிக்க மாணவர்களுக்கு

## பலஸ்தீனர்கள் நன்றி

அமெரிக்க பல்கலைக்கழகங்களில் அதிகரித்து வரும் மாணவர்களின் பலஸ்தீன ஆதரவு போராட்டத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் மாகாண பொலிஸார் களம் இறக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2 வாரங்களாக போராட்டம் நடத்தி வந்த கொலம்பியா பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் புதன்கிழமை (01) கைது செய்தனர். இதற்கு மாணவர் அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், நிவ்யோர்க்கின் பிரபல பல்கலைக்கழகத்தில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வந்த, மாணவர்களை மாநகர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், நிவ்யோர்க், கலிபோர்னியா, டெக்சாஸ் பல்கலைக் கழகங்களில் பலஸ்தீன ஆதரவு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதால், அமெரிக்கா முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அனைத்து அமெரிக்க மாகாணங்களிலும் போராட்டத்தை தீவிரப்படுத்த மாணவர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில், தங்கள் நலனுக்காக தொடர் போராட்டங்களை முன்னெடுத்துவரும் அமெரிக்க மாணவர்களுக்கு பலஸ்தீன இளைஞர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். இதனிடையே பெலஸ்தீன ஆதரவு போராட்டம் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலும் பரவி வருகிறது.



கேரளா

12 வருடங்களாக நுரையீரலில்

## மூக்குத்தியுடன் வாழ்ந்த பெண்



கேரள மாநிலம் கொல்லம் அருகே உள்ள சாஸ்தாம் கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவரின் நுரையீரலில் சிக்கியிருந்த மூக்குத்தியின் பாகத்தை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

44 வயதான இவருக்கு, கடந்த 12 ஆண்டுகளாக மூச்சுத் திணறல் பாதிப்பு இருந்து வந்துள்ளது. இந்தப் பாதிப்புக்கு அந்தப் பெண் பல்வேறு சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

ஆனால், தொடர்ந்து மூச்சுத்திணறல் பிரச்சினை இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில்தான் மூச்சு திணறல் பாதிப்பு அதிகமானதால், அந்தப் பெண் சிகிச்சைக்காக கொல்லத்தில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு சென்றுள்ளார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், நுரையீரலில் சிறிய பொருள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அதனை அறுவை சிகிச்சை செய்து எடுப்பதற்காக கொச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் நுரையீரலில் தங்க மூக்குத்தியின் ஒரு பாகம் சிக்கியிருப்பதை கண்டுபிடித்தனர். இதனைத் தொடர்ந்து ரிஜிட் பிராங்கோஸ்கோப்பி என்ற அதிநவீன அறுவை சிகிச்சை மூலம், மூக்குத்தியின் சிறிய பாகத்தை மருத்துவர்கள் வெளியே எடுத்தனர்.

இதையடுத்து, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, தற்போது அந்தப் பெண் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 12 வருடங்களுக்கு முன் தனது மூக்குத்தி ஒரு பாகம் உடைந்ததாகவும், பின்பு எங்கு தேடியும் கிடக்கவில்லை. ஆனால், தற்போது என் நுரையிரலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

உறங்கும்போது, மூக்கித்தி உடைந்து வாய் வழியாக நுரையிரலுக்குச் சென்றிருக்கலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு

7 மாவட்டங்களுக்கு

## கடும் வெப்ப அலைக்கான எச்சரிக்கை




தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களுக்கு, கடும் வெப்ப அலைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை என இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. கிருஷ்ணகிரி, தருமபுரி, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், கரூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், தி.மலை, சேலம், திருச்சி, திருப்பூர், கோவைக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்:

# சென்னையை வீழ்த்திய பஞ்சாப்




இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), சென்னையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் உடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் தோற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப்பின் அணித்தலைவர் சாம் கர்ரன், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, ஹர்பிறீட் பிறார் (2), ராகுல் சஹர் (2), ககிஸோ றபாடாவிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து ஓட்டங்களைப் பெறத் தடுமாறி அணித்தலைவர் ருத்துராஜ் கைகவாட்டின் 62 (48) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 163 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், ரிச்சர்ட் கிளீசனிடம் ஆரம்பத்தில் விக்கெட்டை இழந்தபோதும் ஜொனி பெயார்ஸ்டோவின் 46 (30), றைலி றொஸோவின் 43 (23), ஷஷாங் சிங்கின் ஆட்டமிழக்காத 25 (26), கர்ரனின் ஆட்டமிழக்காத 26 (20) ஓட்டங்களோடு 17.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. இப்போட்டியின் நாயகனாக பிறார் தெரிவானார்.



துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

## நான்காமிடத்துக்கு முன்னேறிய பாபர் அஸாம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்துக்கு பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான நான்காம், ஐந்தாம் போட்டிகளில் 74 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தை பாபர் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசை பின்வருமாறு,

1.சூரியகுமார் யாதவ், 2.பில் ஸோல்ட், 3.மொஹமட் றிஸ்வான், 4.பாபர் அஸாம், 5.ஏய்டன் மார்க்ரம், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7. றைலி றொஸோ, 8.ஜொஸ் பட்லர், 9.றீஸா ஹென்ட்றிக்ஸ், 10.டேவிட் மலன்.


முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.வனிடு ஹசரங்க, 3.அகீல் ஹொஸைன், 4.அக்ஸர் பட்டேல், 5.மகேஷ் தீக்‌ஷன, ரவி பிஷ்னோய், 7.ஜொஷ் ஹேசில்வூட், தப்ரையாஸ் ஷம்சி, 9.ரஷீட் கான், 10.றீஸ் டொப்லி.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2.வனிடு ஹசரங்க, 3.மொஹமட் நபி, 4.ஏய்டன் மார்க்ரம், 5.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்.

## ஜெஸூஸை விற்கும் ஆர்சனல்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனல், தமது முன்களவீரரான கப்ரியல் ஜெஸூஸைக் கைச்சாத்திட முனையும் கழகங்களுடன் அவரை எவ்வளவு தொகைக்கு கைச்சாத்திட முனைகிறார்களெனக் கலந்துரையாடவுள்ளது.

ஆர்சனலுடன் இன்னும் மூன்றாண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 27 வயதான ஜெஸூஸ், கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்சனலில் இணைந்து 50 போட்டிகளில் 15 கோல்களைப் பெற்றிருந்தார்.



## ஜான் ஒப்ளக்கை வெளியேற்றும் அத்லெட்டிகோ?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட், தமது கோல் காப்பாளரான ஜான் ஒப்ளக்கை கைச்சாத்திட முனையும் கழகங்களுடன் கலந்துரையாடவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், அத்லெட்டிகோவுடன் இன்னும் நான்கு ஆண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 31 வயதான ஒப்ளக், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களுக்கே செல்ல விரும்புவதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2014ஆம் ஆண்டு அத்லெட்டிகோவில் இணைந்த ஒப்ளக், அத்லெட்டிகோவுக்காக 328 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

சம்பியன்ஸ் லீக்: முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில்

## பரிஸ் ஸா ஜெர்மைனை வென்ற டொட்டமுண்ட்



ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டுடனான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் தோற்றது.

டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்லஸ் புல்க்றுக் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 03 மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.